1967 நவம்பர் 27]

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை சிறப்பு அங்காடியில் தற்போது நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம் அதிகமான வாடகையுள்ள கட்டடத்தில் அது இருப்பதுதான் என்று சொல்லப்படுகிறது. அதை குறைந்த வாடகையுள்ள கட்டடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பல காரணங்களில் அதுவும் ஒன்று. இந்த ஆண்டு அந்தக் கட்டடத்திற்கு வாடகையைக் குறைத்திருக்கிறது.

DR. H. V. HANDE: Will the Hon. Minister tell us the exact reasons in detail for these Supermarkets to run at a loss?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி அறிக்கை ஒன்றை ஏற்கனவே திரு. சீமைச்சாமி கேட்ட கேள்விக்குத் தந்திருக்கிறேன். பொதுவாக எட்டு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் பம்பாயில் போய் ஜவுளியை வாங்கி, அது இங்கே தேங்கும்படியாகச் செய்துவிட்டதுதான். கட்டட வாடகையும் ஒரு காரணம். இந்தக் காரணங்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றுக்குப் பொறுப்பான சூழ் நீக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க மருத்துவ மனை, அரக்கோணம்

*464 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: மதிப்பிற்குறிய மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் நகரத்தில் அரசாங்க மருத்துவ மனையில் கூடுதலாக படுக்கை வசதிகள் பெருக்கவும், மருத்துவ மனையை விஸ்தரிக்கவும் திட்டமிட்டு நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு (Emergency) நிறுத்தி வைக்கப்பட்டதை மீண்டும் எடுத்து நடத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசின் நிதி நிலை வசதியான பின் இந்த விஷயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் முன்பு இருந்த படுக்கை வசதிகள்தான் இப்போதும் இருக்கின்றன. முன்பு இருந்த அமைச்சரவையை, படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டோம். அதற்குள் எமர்ஜன்ஸி வந்துவிட்டது. இப்போதுதான் அது நீக்கப்பட்டு விட்டதே. ஆகையால் அரக்கோண நகர ஆஸ்பத்திரியில் படுக்கை வசதியை அதிகப்படுத்த இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் நிதிநிலைமை சரிப்பட்டதும் அது கவனிக்கப்படும்.